

திருவண்ணாமலையில், தூய்மை அருணை அமைப்பு சார்பில் நடைபெறும் தூய்மைப் பணிகள், மரம் நடுதலை பார்வையிட்டு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார். அங்கு தூய்மை அருணை ஒருங்கிணைப்பாளர்களுடன் இணைந்து, தூய்மைப் பணியில் ஈடுபட்ட மாநகராட்சி தூய்மை பணியாளர்களுடன் தேநீர் அருந்தி, அமைச்சர் எ.வ.வேலு உற்சாகப்படுத்தினார். உடன் மேற்பார்வையாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளனர் .



விழுப்புரம் மாவட்ட கழக பொருளாளர் மேனாள் நகர்மன்றத் தலைவர் அண்ணன் விழுப்புரம் இரா.ஜனகராஜ் அவர்களின் தந்தை, மறைந்த இராஜாமணி அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை மலர் தூவி மரியாதை செலுத்தி வணங்கினார்.

### சென்னை மாநகரில் பெருமழை:

# பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் பணியாற்றிட வேண்டும்!

## ஜெர்மனியிலிருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்!

டசெல்டோர்ஃப்,, செப்.1-

தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க ஐரோப்பிய நாடுகளுக்கானப் பயணத்தை மேற்கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று ஜெர்மனி சென்றடைந்தார்.

ஜெர்மனி வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் நேற்று முன்தினம் (30.08.2025) இரவு பெருமழை கொட்டித் தீர்த்தது.

இச் செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைபேசியில் சென்னையில் உள்ள அதிகாரிகளை தொடர்பு கொண்டு சென்னை மாநகரில் பெய்த மழையால் பொது மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் பணியாற்றிட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.



இது பற்றிய விவரம் வருமாறு:- சென்னை மாநகரம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று இரவு (30.08.2025) பெய்த மழை அளவு குறித்தும் அதனால் சாலைப்போக்குவரத்து, மழை நீர் வடிகால் மற்றும் தாழ்வான பகுதிகளில் ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்தும் முதலமைச்சர் அவர்கள் தொலைபேசியில் கேட்டறிந்தார்.

நேற்று இரவு பெய்த கனமழையால் மாநகரில் பெரிய அளவில் எவ்வித பாதிப்புகள் இல்லையெனவும் சுரங்கப்பாதைகள் உள்ளிட்ட எல்லாப் பகுதிகளிலும் சாலைப் போக்குவரத்து சீராக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், எத்தகைய மழைச் சூழலையும் எதிர்கொள்ள கூடிய அளவில் எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும் பெரு மழை காரணமாக பொது மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் பணியாற்றிடவும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

### முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் துணைவியார்

# திருமதி லீலா ஆறுமுகம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை , செப்.1-

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

முன்னாள் அமைச்சர் சேலத்துச் சிங்கம் வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்களின் துணைவியாரும், சேலம் கிழக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளர் வீரபாண்டி ஆ.பிரபு அவர்களின் தாயாருமான திருமதி லீலா ஆறுமுகம் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

தகவலறிந்ததும், அன்னையை இழந்து தவிக்கும் தம்பி ஆ. பிரபு அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு எனது ஆறுதலைத் தெரிவித்தேன்.

திருமதி. லீலா அம்மையாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்கள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### வாக்காளர் பட்டியல் முறைகேடுக்கு எதிரான

# ராகுல் காந்தியின் பேரணி இன்றுடன் நிறைவடைகிறது!

## பாட்னாவில் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடைபெறுகிறது!

பாட்னா, செப்.1-

வாக்காளர் பட்டியல் முறைகேடுக்கு எதிரான ராகுல் காந்தியின் வாக்காளர் உரிமை பேரணி இன்று (1.9.2025) முடிவடையும் நிலையில், பாட்னாவில் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப் பட்டதை எதிர்த்து, பீகாரில் வாக்காளர் உரிமை யாத்திரையை ராகுல்காந்தி மேற்கொண்டு வருகிறார்.

கடந்த 17 ஆம் தேதி தொடங்கிய இந்த பேரணி, பீகாரில் 20 மாவட்டங்களில் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தர்பங்காவில் நடை பெற்ற பேரணி, பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டார். சமாஜ்வாதி கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவ், ஆர்.ஜே.டி தலைவர் தேஜஸ்வி யாதவ், தெலுங்கானா, கர்நாடக முதலமைச்சர்கள் உள்ளிட்டோர் ராகுல் காந்தியின் பேரணியில் பங்கேற்று உரையாற்றினர்.

இந்நிலையில், ராகுல் காந்தி 16 நாள் பேரணி பாட்னாவில் இன்று முடிவடைகிறது. பாட்னாவில் ராகுல்காந்தி உள்ளிட்ட தலைவர்கள் நடைபயணம் செல்கின்றனர். அதன் முடிவில் பிரமாண்ட பொதுக் கூட்டம் நடைபெறுகிறது.

திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி தலை வர்கள் இந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

### தமிழ்நாட்டில்

# சுங்கச் சாவடிகளில் கட்டண உயர்வு!

## அமலுக்கு வந்தது!

சென்னை, செப்.1-

தமிழ்நாட்டில், தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள 25 சுங்கச்சாவடிகளில் நேற்று நள்ளிரவு முதல் சுங்க கட்டண உயர்வு அமலுக்கு வந்தது.

இந்தியாவில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள், ஒன்றிய அரசின் தேசிய நெடுஞ்சாலை அமைச்சகத்தின் கீழ் இயங்கி வருகிறது. ஒரு லட்சத்து 44ஆயிரத்து 634 கிலோமீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் மொத்தம் 892 சுங்க சாவடிகள் உள்ளன.

இந்த சுங்க சாவடிகளை தேசிய நெடுஞ்சாலை அமைச்சகம் தனியார் நிறுவனங்களுக்கு ஒப்படைத்து கட்டணம் வசூலிக்க அனுமதி அளித்துள்ளது. தமிழ்நாட்டில் மட்டும் 6ஆயிரத்து 606 கிலோமீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் மொத்தம் 54சுங்கசாவடிகள் இயங்கி வருகின்றன. இதில் ஆண்டொன்றுக்கு 5சதவீதம் முதல் 10 சதவீதம் வரை கட்டணம் உயர்த்தி வசூலிக்கப் படுகிறது.

இந்நிலையில், இன்று நள்ளிரவு முதல் தமிழ்நாட்டில் உள்ள 25 சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வு அமலுக்கு வருகிறது. கார், வேன், ஜீப் உள்ளிட்ட வாகனங்களுக்கு பழைய கட்டணத்திலிருந்து ஒரு முறை, இருமுறை பயணத்திற்கு 5ரூபாய் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது.

மாதாந்திர கட்டணம் 65ரூபாய் கூடுதல் வசூலிக்கப்படவுள்ளது. இலகுரக வாகனங்களுக்கு ஒரு முறை செல்ல கட்டணம் உயர்த்தப்படவில்லை. இருமுறை பயணத்திற்கு 5 ரூபாயும் மாதாந்திர கட்டணம் 105 ரூபாய் கூடுதல் வசூலிக்கப் படவுள்ளது. லாரி பஸ் உள்ளிட்ட கனரக வாகனங்களுக்கு ஒரு முறை செல்ல 5 ரூபாயும் இருமுறை பயணத்திற்கு 10 ரூபாயும் கூடுதல் மாதாந்திர கட்டணம் 215 ரூபாயும் வசூலிக்கப்படவுள்ளது.

இரண்டு அச்சு, மிக கனரக வாகனங்களுக்கு ஒரு முறை 5 ரூபாயும் இரு முறை பயணத்திற்கு 20 ரூபாயும் கூடுதல் மாதாந்திர கட்டணம் 345 ரூபாயும் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. இந்தக் கட்டணங்கள் பாஸ்ட்டேக் வசதி உள்ள வாகனங்களுக்கு மட்டும் பொருந்தும் எனவும் பாஸ்டேக் இல்லாத வாகனங்களுக்கு இரண்டு மடங்கு கட்டணம் வசூலிக்கப்படும் எனவும் சுங்கச்சாவடி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

### தூத்துக்குடி நயினார்விலை மேற்குப் பகுதியில்

# கழக முன்னோடி சவுந்தரபாண்டியன் 95வது பிறந்த நாள்!

## அமைச்சர் பி.கீதா ஜீவன் நேரில் வாழ்த்து!

நெல்லை செப். 1 - முன்னாள் ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட தி.மு.க. பொறுப்பாளராக பணியாற்றிய கழக முன்னோடி சவுந்தரபாண்டியன் அவர்களின் 95வது பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி நயினார்விலை மேற்கு பகுதியில் உள்ள அவரது இல்லத் திற்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான திருமதி. கீதாஜீவன் சென்று வாழ்த்து தெரிவித்து கௌரவித்தார்.



திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டாரம், மாடப்பள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க.சிவசௌந்தரவள்ளி தலைமையில் மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தொடங்கி வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ., எஸ்.ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர் கே.ஆர்.திருப்பதி, கே.முருகேசன், கே.ஏ.குணசேகரன், அ.மோகன்ராஜ், எம்.ராஜேந்திரன், சு.அரசு, டி.சந்திரசேகர், ஜயாஅருணாசலம், திருமதிதிருமுருகன், ஞானசேகரன், மோகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சௌந்தரபாண்டியன் அவர்கள் தி.மு.க. தணிக்கை குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர். மேலும் தூத்துக்குடி மேலூர் கூட்டுறவு வங்கி தலைவராகவும், பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

அந்நிகழ்வின் போது மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், வட்டச் செயலாளர் ரவி இளங்கோ, மாமன்ற உறுப்பினர் மரிய கீதா,

வட்ட பிரதிநிதிகள் ஏகாம்பரம், இளங்கோ, வட்ட துணைச் செயலாளர்கள் சுந்தர், ராமலட்சுமி, முன்னாள் வட்டச் செயலாளர் கோயில் ராஜ், முன்னாள் மாமன்ற உறுப்பினர் பாலாஜி, மாநகர மாணவரணி அமைப்பாளர் டைகர் வினோத், திரேஸ்புரம் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெர்சன், பகுதி விவசாய அணி துணை அமைப்பாளர் நடராஜன், பகுதி கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் சிற்றரசு, வட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆஸ்டின் ஆகியோர் உடன் இருந்தனர்.



மதுரை மாநகராட்சி மூலம் மாமதுரையை தூய்மையான நகரமாக்கிட "எழில்கூடல் எனும் சிறப்பு திட்டத்தில் முதற்கட்டமாக மீனாட்சி சுந்தரரேஸ்வரர் திருக்கோவிலை சுற்றியுள்ள நான்கு மாசி வீதிகளில் மாபெரும் தூய்மை பணியினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்தார். தன்னார்வலர்கள், தூய்மை பணியாளர்கள், தொழில் முனைவோர் உள்ளிட்ட சுமார் இரண்டாயிரம் பேர் ஒருங்கிணைந்து மேற்கொண்ட இந்த பணியில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், அருள்மிகு மீனாட்சி சுந்தரரேஸ்வரர் திருக்கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

### முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் துணைவியார்

# திருமதி லீலா ஆறுமுகம் மறைவு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் அஞ்சலி!

சென்னை, செப்.1-

மேனாள் வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் அவர்களின் துணைவியாரும், சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் வீரபாண்டி ஆ.பிரபு தாயாருமான திருமதி. லீலா ஆறுமுகம் அவர்கள் திடீர் உடல்நிலை பாதிக்கப்பட்டு சென்னை, முரசொலி அலுவலகம் அருகே உள்ள சூர்யா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டு, நேற்று (31.08.2025) காலை இயற்கை எய்தினார் என்பதினை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



இச்செய்தியறிந்ததும் கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மறைந்த திருமதி லீலா ஆறுமுகம் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

மேலும் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் மறைந்த லீலா ஆறுமுகம் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (01.09.2025) பிற்பகல் 12 மணியளவில் கள்ளக்குறிச்சி மெயின்ரோட்டில் உள்ள ஏ.வி.ஆர். கிருஷ்ணா விலாவிலிருந்து புறப்பட்டு பூலாவரியில் உள்ள இடுகாட்டில் இறுதி சடங்கு நடைபெறுகிறது.



இந்து சமய அறநிலையத்துறை சார்பில் செஞ்சி சிங்கவரம் ரங்கநாதர் கோவிலில் 6 ஜோடிகளுக்குநடைபெற்ற இலவச திருமண விழாவில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டுதிருமண சீர்வரிசை பொருட்களை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொத்தியார் அலி மஸ்தான்,மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், கோவில் உதவி ஆணையர் சக்திவேல் உள்ளனர்.